பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை 15.11.2020 கதிர் 241

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 600 குடும்பங்கள் சுயதனிமை

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய சுமார் 600 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் இன்று தெரிவித்தார்.

2

# கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் சிறிதரன் எம்.பி. தலைமையில் துப்பரவு

### பொலிஸார் நேரில் விசாரணை; வாக்குமூலமும் பதிவு





**கிளிநொச்சியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தைத் துப்பரவு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சுகாதார நடைமுறைகளுடன் துப்பரவு பணிகளில் ஈடுபடவும் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.**

2

## இலங்கையில் 3 வாரங்களில் 40 பேர் கொரோனாவால் சாவு

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் கடந்துள்ள 24 நாள்களில் மாத்திரம் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் 22 வரையான சுமார் 8 மாத காலப்பகுதியில் கொரோனாவால் 13 பேரே உயிரிழந்திருந்தனர்.

2

## தீபாவளி நாளில் வடமராட்சியில் வன்முறைகள்; 18 பேர் படுகாயம்!

யாழ். வடமராட்சிப் பகுதியில் நேற்று தீபாவளித் திருநாளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் படுகாயமடைந்த 18 பேர் பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்தவர்கள் துன்னாலை, அல்வாய், பருத்தித்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

தீபாவளித் திருநாள் நேற்று யாழ். மாவட்டத்தில் இந்துக்களால்

2

## ஜனாதிபதி மக்களுக்கு விசேட உரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இம்மாதம் 18ஆம் திகதி அதாவது எதிர்வரும் புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2



## வாளுடன் வெட்ட வந்தவரை மடக்கிய தேராவில் மக்கள்!

### பொலிஸாரிடம் ஒப்படைப்பு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் வாளுடன் நடமாடிய குழுவைச் சேர்ந்த ஒருவரை கிராம மக்கள் மடக்கி பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளார்கள்.

அங்கு வாள்வெட்டு குழுவின் அட்டகாசம் தாங்கமுடியாதநிலையில் உள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

சனி, ஞாயிறு நாள்களில் வாள்வெட்டுகுழுவின் தொல்லை தாங்கமுடியாத நிலை காணப்படுகின்றதாம். இரவு நேரங்களில் விதவைப்பெண்களின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளும்

2

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட தம்பகாமம் ஊடாக மாமுனை செல்லும் வீதியில் செம்பியன்பற்று வடக்கு மாமுனையை சேர்ந்த தனபாலசிங்கம் குலசிங்கம் என்பவர் இனந்தெரியாத நபர்களால் இன்று பிற்பகல் 3 மணியளவில் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரனைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நவம்பர் 17இல் மொட்டு அரசின் கன்னி 'பட்ஜட்'

### ரூ.2,67,804 கோடி ஒதுக்கீடு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசின் 2021 ஆம் ஆண்டுக்கான செலவீனங்களுக்காக வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக 267,804 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடாக 2,00,054 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2021 ஆம் ஆண்டுக்காக மேலதிகமாக 67,750 கோடி ரூபாவை ஒதுக்கி வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2

## கருணா பற்றிய குற்றச்சாட்டுக்களை ராஜபக்ஷ அரசு விசாரிக்க வேண்டும்!

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் வலியுறுத்து

'கருணா அம்மான்' என்றழைக்கப்படும் முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மீது கிழக்கு மாகாண மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜனாதிபதி - பிரதமர் தலைமையிலான ராஜபக்ஷ அரசு விசாரணை செய்ய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

6

## சுகாதார விதிகளை மீறி பஸ் சேவை; சாரதி,நடத்துனர் தனிமைப்படுத்தலில்!

### வழித் தட அனுமதியும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தீபாவளி திருநாளுக்கு முதல் நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தல்

2

### தூதரக அதிகாரிகள் உட்பட

## 128 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

சீனா மற்றும் மத்திய கிழக்கிலிருந்து இலங்கைத் தூதரக அதிகாரிகள் உட்பட மொத்தம் 128 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

2

## சுகாதார விதிகளை மீறி பஸ் சேவை; ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டத்தை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றமை தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டறியப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைய கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரியினால் இந்த நடவடிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார நடைமுறைகளை மீறி பயணிகளை ஏற்றிச் சென்றதையடுத்து அந்த பேருந்துக்கான வழித்தட அனுமதிப்பத்திரமும் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் எச்சரிக்கை நிலையின் கீழ் பஸ்ஸின் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். அத்தோடு பயணிகள் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

இந்த நடைமுறைகள் பின்பற்றப்படாத நிலையில் மேற்படி தனியார் பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனர் சுயதனிமைப் படுத்தப்பட்டு வழித்தட அனுமதியும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## 128 இலங்கையர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி சீனாவின் ஷாங்காயிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் - 867 என்ற விமானத்தில் ஐந்து இலங்கையர்கள் நேற்று மாலை 6.35 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஈ.கே. - 648 என்ற விமானத்தில் 59 இலங்கையர்கள் நேற்றிரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அத்துடன் கட்டார், தோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான கியூஆர் - 668 என்ற விமானத்தில் 39 இலங்கையர்கள் இன்று அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை தூதரக அதிகாரிகளும் டுபாயிலிருந்து எமிரேட்ஸிலிருந்தும், கட்டாரிலிருந்தும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இது தவிர டுபாயிலிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் -226 என்ற விமானத்தில் 25 இலங்கையர்களும் இன்று அதிகாலை 4.30 மணிக்கு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் கொழும்பில் அமைந்துள்ள நவலோக மற்றும் லங்கா தனியார் வைத்தியசாலைகளின் ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன்பின்னர் பயணிகள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்காக நீர்கொழும்பு பகுதியில் அமைந்துள்ள பல சுற்றுலா ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், தூதரக அதிகாரிகள் சுயதனிமைப்படுத்தலுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## வாளுடன் வெட்ட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாள்வெட்டு குழு வீட்டிற்கு வரவா, இல்லை உன் மகளை கடத்துவேன் அல்லது மகளுக்கு கை எடுப்போன் என மிரட்டல் விடுகின்றதாம்.

இவ்வாறு மிரட்டுபவர்களின் ஒலி வடிவங்கள் பதிவுசெய்யப்பட்டு பொலிஸாருக்குக் கொடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இன்று காலை வாளுடன் வெட்ட வந்தவர்களை பிடித்த கிராம இளைஞர்கள் அதில் ஒருவரை வீட்டில் கட்டிவைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

தேராவில் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக வாள்களுடன் நடமாடுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமையுடன் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 600 குடும்பங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்டத்தில் நேற்று மேலும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்தவர் என்று மாவட்ட அரச அதிபர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து தொற்றாளருடன் நேரடித் தொடர்புகளை பேணியுள்ளவர்களை தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் தற்போது பி.சி. ஆர். பரிசோதனையின் பின்னர் கட்டம் கட்டமாக தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்படி தற்போது சுமார் 600 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்கின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் 3 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒக்டோபர் 31ஆம் திகதியாகும்போது மரண எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

எனினும், கடந்துள்ள 15 நாட்களில் மாத்திரம் 33 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 90 வீதமானோர் 60 வயதைக் கடந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையில் கொரோனாவின் 3ஆவது அலைமூலம் நேற்று வரை 13 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 106 என்ற எண்ணிக்கையுடன் மினுவாங்கொடைக் கொத்தணிப் பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், பேலியகொட கொத்தணிப் பரவல் 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. மூன்றாம் அலைமூலம் தொற்றுக்குள்ளானவர்களில் 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று நள்ளிரவு வரை 16 ஆயிரத்து 583 பேருக்குக் கொரோனா தொற்றியுள்ளது. இவர்களில் 11 ஆயிரத்து 324 பேர் நேற்று வரை குணமடைந்துள்ளனர். 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

## தீபாவளி நாளில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழமைக்கு மாறாக ஒன்றுகூடல்களைத் தவிர்த்து அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. எனினும், பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறைகளால் பலர் படுகாயமடைந்துள்ளனர். வடமராட்சியில் மட்டும் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## ஜனாதிபதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த நாள் இந்த உரை இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவீரர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை 9 மணியளவில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் துப்பரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினருடன் பொதுமக்களும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

துப்பரவுப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கிளிநொச்சி தலைமைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் அப்பகுதிக்கு வருகை தந்ததுடன், கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமாரவும் வருகை தந்திருந்தார்.

தற்போதுள்ள கொரோனா காலப்பகுதியில் அதிகளவான மக்கள் கூடியிருப்பது தொடர்பில் சிறிதரன் எம்.பியிடம் பொலிஸார் வினவினர். இதற்குப் பதிலளித்த அவர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே நாம் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து அதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய சிறிதரன் எம்.பி. உள்ளிட்ட பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், சிரமதானத்துக்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் மற்றும் வாகன இலக்கங்களும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. அங்கு வருகை தந்திருந்தவர்களைப் பொலிஸார் ஒளிப்பதிவும் செய்தனர்.

வாக்குமூலம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சிறிதரன் எம்.பி.-

கடந்த வருடம் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வித தடையும் விதிக்கவில்லை. இவ்வாறான நிலையில் இம்முறையும் தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன். இவ்விடயம் தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளேன். அதேபோன்று நேற்று முன்தினம் சுமந்திரன் எம்.பி. இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்றியும் இருந்தார்.

இவ்வாறானநிலையில் கடந்த வருடம் போன்று இவ்வருடமும் மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்குத் தடை விதிக்கப்படாது என்று நம்புகின்றேன்.

இன்று எம்மிடம் வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவு செய்தனர். சுகாதார நடைமறைகளைப் பின்பற்றியே துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர்களிடம் தெரிவித்துள்ளோம். இதுவரை எவ்விததடைகளும் விதிக்கப்படவில்லை.

கொரோனா காலத்தில் இத்தனை பேர் ஏன் திரண்டீர்கள் எனப் பொலிஸார் கேட்டனர். கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ். கச்சேரியில் 250 இற்கு மேற்பட்டோர் ஒன்றாகக் கூடியிருந்தனர். ஆனால், இங்கு மிகக் குறைவானோரே கூடினோம் என்று பதிலளித்தோம்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து சமூக இடைவெளிகளை பேணியும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் துப்பரவுப் பணியில் ஈடுபடுமாறு பொலிஸார் பணித்தனர் - என்றார்.

(52)

## நவம்பர் 17இல் மொட்டு அரசின் ..........................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 1.40 மணியளவில் பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் விசேட செலவினங்களுக்கான 1960 கோடியே 33 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சுக்கு 94 கோடியே 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பௌத்த விவகாரங்கள் தொடர்பான அமைச்சிற்கு 360 கோடியே 60 லட்சம் ரூபாவும், முஸ்லிம் சமய பண்பாடு அலுவல்கள் திணைக்களத்திற்கு 19 கோடியே 60 லட்சம் ரூபாவும், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்திற்கு 27 கோடியே 90 லட்சம் ரூபாவும், இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு 31 கோடியே 80 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்கு 60 கோடியே 40 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி - பிரதமரின் கீழுள்ள அமைச்சுகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு**

இதேவேளை, பிரதமரின் கீழுள்ள நிதி அமைச்சுக்கு 15,760 கோடியே 37 லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி மூலதன சந்தை, மற்றும் அரச தொழில் முயற்சிகள், மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சுக்கு 3,299 கோடியே 31 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என வரவு - செலவு திட்டத்தின் வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் கீழுள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு 35,515 கோடியே 92 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு 2,520 கோடியே 45 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு 15,246 கோடியே 92 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு 15,947 கோடியே 59 லட்சத்து 98 ஆயிரம் ரூபாவும், சுதேச வைத்திய, ஆயுர்வேத மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சிற்கு 264 கோடியே 90 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு 12,654 கோடி ரூபாவும், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு 3,045 கோடியே மூன்று லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெகுசன ஊடக அமைச்சுக்கு 519 கோடியே 21 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் அதனுடன் கூடிய தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கு 1575 கோடியே 36 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சுக்கு 1,975 கோடியே 38 லட்சத்து 77 ஆயிரம் ரூபாவும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சுக்கு 1,038 கோடியே 89 லட்சத்து 61ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு 1,284 கோடியே 94 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், பிராந்திய உறவுநடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சுக்கு 16 கோடியே 75 லட்சம் ரூபாவும், போக்குவரத்து அமைச்சுக்கு 4,140 கோடியே 90 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சுக்கு 25 கோடியே 26 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வர்த்தக அமைச்சுக்கு 562 கோடியே 26 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 33,018 கோடியே 50 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், மின்சக்தி அமைச்சுக்கு 31 கோடியே 29 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காணி அமைச்சுக்கு 832 கோடியே 80 லட்சம் ரூபாவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 172 கோடியே ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என வரவு - செலவுத் திட்ட வரைபில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 27,172 கோடியே 30 லட்சம் ரூபாவும், பெருந்தோட்ட அமைச்சுக்கு 128 கோடியே 98 லட்சம் ரூபாவும், கடற்தொழில் அமைச்சுக்கு 458 கோடியே 41 லட்சம் ரூபாவும், சுற்றுலாத்துறை அமைச்சுக்கு 185 கோடியே 79 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றாடல் அமைச்சுக்கு 199 கோடியே 71 லட்சம் ரூபாவும், விளையாட்டுத்துறை அமைச்சுக்கு 1,092 கோடியே 76 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், ஏனைய அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கு என 2,67,804 கோடி ரூபாவும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வருகின்றது 'பட்ஜெட்'!

நாட்டின் நிதி அமைச்சர் என்ற முறையில் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அண்மைய காலத்தில் மிக மோசமான – மிக நெருக்கடியான – பின்னடைவான – சிக்கலான – பொருளாதாரப் பின்புலத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு – செலவுத் திட்டம் இது என்று குறிப்பிடலாம்.

கொரோனாத் தொற்றுப் பரம்பலால் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சமர்ப்பிக்கப்படும் வரவு – செலவுத் திட்டம் இது.

கடந்த இரு தசாப்த காலத்தில் மிகப் பின்னடைவான நிலைக்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி காணும் வேளை இது என இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கைக்கு உதவும் சர்வதேச அமைப்புகளான ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை எதிர்வு கூறியுள்ள பின்னணியில் இந்த வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

அதில் பெரும் நிதியை அடுத்த ஆண்டில் விழுங்கப் போவது இரண்டு துறைகள்.

ஒன்று – சம்பளமும் ஒய்வூதியமும். அது சுமார் ஒரு லட்சம் கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தது – நாடு இதுவரைப் பட்ட கடன்களுக்கான வட்டி. அது சுமார் 90 ஆயிரம் கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கடனுக்கான தவணைப் பணம் அல்ல, கடனுக்கான வட்டியே இத் தொகையாகும். முதல் இல்லாமல், வட்டி மட்டும் இத்துணை தொகையை – 90 ஆயிரம் கோடி ரூபாவை – நாடு செலுத்த வேண்டியுள்ளது.

சம்பளத்தையும் ஒய்வூதியத்தையும் பொறுத்தவரை அடுத்த ஆண்டில் செலுத்த வேண்டிய கொடுப்பனவுக் கடப்பாடு ஒரு லட்சம் கோடி ரூபா என்று இப்போது மதிப்பீடு செய்யப்பட்டாலும் அடுத்தண்டில், இவ்விடயத்தில் உண்மைச் செலவினம் அதைத் தாண்டி பெருந்தொகையில் போய் நிற்கும் எனப் பொருளாதார அவதானிகள் தெரிவிக்கின்றனர். அதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

நாற்பதாயிரம் பட்டதாரி ஆசிரியர்களை அரசு இப்போது புதிதாக உள்வாங்கியுள்ளது.

இதேபோன்று ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடையாத – வறுமைக் கோட்டுக்குள் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த – ஒரு லட்சம் பேருக்கும் புதிதாக வேலைவாய்ப்பு வழங்க அரசு உத்தேசித்து, அறிவித்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேரின் மாத வேதனமும் அடுத்த ஆண்டு – வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படும் போது, அதில் சம்பளம் மற்றும் ஒய்வூதியக் கொடுப்பனவுக் கடப்பாடு ஒரு லட்சம் கோடி ரூபாவை இலகுவாகத் தாண்டும் என்பது திண்ணம்.

போதாக்குறைக்கு, பெரும் லாபத்தில் இயங்க வேண்டிய பல அரச நிறுவனங்கள் பொது நிதியை தின்று ஏப்பம் விடும் வெள்ளை யானைகளாகி விட்டன. வேறு சில நிறுவனங்களோ வருமதிகள், நிலுவைகள் அறவிட முடியாமல் பெருமளவு நிதியயைத் தொடர்ந்து ஏப்பம் விடும் இக்கட்டில் – சிக்கலில் – சிக்கித் தவிக்கின்றன.

ஸ்ரீ லங்கன் ஏயார் லைன்ஸ், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்றவை இந்த வகையறாக்களுக்குள் அடங்கும்.

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய வைரஸான கொரோனாவின் தாக்கம் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பையே பெரிதும் சிதைத்தழித்துவிட்டது.

ஊரடங்குகள், முடக்கங்கள், தனிமைப்படுத்தல்கள், பயணக் கட்டுப்பாடு போன்ற இறுக்கங்களினால் நாட்டின் உற்பத்தி சகல துறைகளிலும் அடியோடு படுத்துவிட்டது. இந்த வீழ்ச்சிகளினால் ஏற்பட்ட பின்னடைவு ஒருபுறம் என்றால், கொரோனாவுடன் போராட தினசரி பல நூறு கோடி ரூபாவை நாடு செலவிட வேண்டியிருக்கின்றது.

கொரோனாத் தொற்றுப் பாதிப்பால் நாட்டின் உற்பத்தித்துறை பெரு வீழ்ச்சி கண்டுள்ளது. பெரிய தொழிற்சாலைகள், ஏற்றுமதி நிறுவனங்களில் தொடங்கி விவசாயிகள், சிறிய ரக உற்பத்தியாளர்கள், சேவை முகவர்கள் வரைப் பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறைகள் பெரும்பாலும் படுத்துவிட்டன.

இவற்றை எல்லாம் மீளெழுச்சி பெற வைத்தால் மட்டுமே நாட்டின் பொருண்மியம் மேன்மை பெறும். நாட்டு மக்கள் மூச்சு விடக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, நாளை மறுதினம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டம் வெறுமனே நாட்டுக்கு – அரசுக்கு – வருமானத்தைத் தேடித் தருவதாகவோ, வரவுக்கும் செலவுக்கும் இடையில் துண்டு விழப் போகும் பெரும் தொகைப் பணத்தை ஈடுகட்டக் கூடிய வழிவகைகள் பற்றிய விவரங்களை விவரிக்கின்ற கணக்கறிக்கையாகவோ மட்டும் இருந்து விடக் கூடாது.

அதையும் தாண்டி, கொரோனத் தொற்றால் பாதிப்படைந்துள்ள உற்பத்தித் துறைகள், விவசாயம் உள்ளிட்ட தனியார் துறையின் உற்பத்தி சார் தகைமைகளை உந்தித் தள்ளி ஊக்குவிப்பதற்கான மார்க்கங்களையும் கொண்டதாக அமைய வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி எதிர்கொள்ள முடியாத சிக்கலாக இருந்தாலும் அதற்கு மத்தியிலும் உற்பத்தித்துறைகளை ஊக்குவிக்கும் நல்ல மார்க்கங்களைக் கடைப்பிடிப்பதும் அரசின் கடமையாகும்.

# கொரோனா விதிகளை மீறிய பலர் கைதாகினர்!

## பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.15

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாதமை தொடர்பில் இதுவரையில் 201 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் ஆள்நடமாட்டம் தொடர்பில், கண்காணிப்பதற்காக விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ட்ரோன் கமெராக்களின் ஊடாகக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய கடந்த வியாழக்கிழமை 15 பேரும், கடந்த வெள்ளிக்கிழமை 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் இது வரையில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்தப் பகுதிகளில் அத் தியாவசிய சேவைகள் மற்றும் வைத்திய சிகிச்சைகளுக்காக மாத்திரமே பயணிப்ப தற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூக இடைவெளி பேணாமை மற்றும் முகக்கவசம் அணியாமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை மாத்திரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது நீர்கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் சீதுவ ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய இதுவரையில் இந்த சட்ட விதிகளை மீறினர் என 201 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மேல்மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் மாத்திரம் மேல்மாகாணத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றமையுடன், ஏனையவர்கள் மேல் மாகாணத்துக்குள் வருவதற்கோ அல்லது அங்கிருந்து வெளியேறுவதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது.

# மட்டக்களப்பில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கைக்குண்டொன்று நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் விவசாய நடவடிக்கைக்காக நிலத்தைப் பண்படுத்துகையில் பிளாஸ்டிக் பாத்திரம் ஒன்றிலிருந்து இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி காக்காச்சிவட்டை எனும் கிராமத்திலே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டதாகவும், இதனை நீதிமன்ற அனுமதியைப்பெற்று குண்டு அகற்றும் விசேட அதிரடிப்படை மூலம் அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு வெல்லாவெளி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி முன்னைய காலங்களில் விடுதைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி என்பதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹட்டன் கல்வி வலயத்திலிருந்து இந்த முறை ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்குத் தெரிவா?

## உண்மையைத் தெளிவுபடுத்தக் கோருகிறது இ.தொ.கா.



மத்திய மாகாணத்தின் ஹட்டன் கல்வி வலயத்திலிருந்து இவ்வருடம் ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர் என்ற தகவலின் உண்மைத் தன்மையை சமூகத்துக்கு வெளிப்படுத்துமாறு இ.தொ.காவைச் சேர்ந்த மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கணபதி கனகராஜ், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்திலிருந்து தேசிய பல்கலைக்கழகங்களுக்கு ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு இருந்தால் அதைவிட மகிழ்ச்சியான விடயம் எதுவும் இருக்க முடியாது. இந்தச் செய்தி உண்மையாக இருப்பின் மலையகத்தின் கல்வி வளர்ச்சி மட்டத்தை தாண்டி பெரும் பாய்ச்சல் மட்டத்தை அடைந்திருக்கிறது என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆனால் வழங்கப்பட்டிருக்கின்றது தகவல்கள் பிழையானவையாக இருப்பின் அது முழு சமூகத்தையும் ஏமாற்றும் நடவடிக்கையாகும். பொதுவாகக் கல்வி அதிகாரிகள் தகவல்களை வெளியிடும் போது புள்ளி விவரங்களுடன் வெளியிட வேண்டும். இந்த விடயம் தொடர்பாக உண்மையை தெரிந்து கொள்வதற்காக மலையகத்தில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் வாழுகின்ற மலையக கல்வியில் ஆர்வமுடையவர்கள் பெருத்த எதிர்பார்ப்பில் இருக்கிறார்.

இந்த செய்தி வெளிவந்தவுடன் பலர் எம்மோடு தொடர்பு கொண்டு ஹட்டன் கல்வி வலையத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பான உண்மைத் தன்மையை தெளிவுபடுத்துமாறு கோரி வருகின்றனர்.


இந்த நிலையில் எமக்கு கிடைத்த தகவலின்படி ஹட்டன் கல்வி வலயத்திலிருந்து 386 பேர் தமிழ் மொழி மூலமும் சிங்கள மொழி மூலமும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றனர்.

எனினும் உத்தியோகபூர்வமான பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களின் விவரங்களை மத்திய மாகாண கல்வித் திணைக்களம் இருந்து எதிர்பார்க்கின்றோம். ஆகவே மத்திய மாகாணத்தின் கல்வி வலயத்திலிருந்து இலங்கை தேசிய பல்கலைக் கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் முழு விவரங்களையும் பொதுமக்களுக்கு பொறுப்புடன் தெரிவிக்க வேண்டியது மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

ஆகவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உண்மையை வெளிப்படுத்தும் கேட்டுக்கொள்கிறேன்கேட்டுக்கொள்கிறேன்.- என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# உயிர் நீத்த வீரர்களுக்கு கடற்கரையில் மணல் சிற்பம்

ஒடிசா மாநிலம் பூரியில் பிரபல மணல் சிற்பியான சுதர்சன் பட்நாயக், அண்மையில் பாகிஸ்தான் இராணுவத்தின் தாக்குதலுக்கு ஆளாகி உயிர் தியாகம் செய்த இந்திய வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில் கடற்கரையில் மணல் சிற்பத்தை வடித்துள்ளார்.

இதனை ஏராளமான பொதுமக்கள் கண்டு, உயிர்த்தியாகம் செய்த இந்திய வீரர்களுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

# தென்சீனக் கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் குறித்து இந்தியா கவலை!



தென்சீனக் கடல் பகுதியில் நடைபெறும் சீனாவின் அதிகார அத்துமீறல்கள் தொடர்பாக இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற கிழக்காசிய மாநாட்டில் உரை நிகழ்த்திய மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் –

சீனாவின் கடல் ஆக்கிரமிப்புகள் இதர நாடுகளுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

சர்வதேச கடல் எல்லைகள் தொடர்பாக ஐ.நா.சபை வகுத்த வரைமுறைகளை மீறக் கூடாது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மாநாட்டில், சீனா உட்பட பத்து கிழக்காசிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தான் தூதரக அதிகாரியை அழைத்து இந்தியா கண்டனம்!

## எல்லை விவகாரம் தொடர்பாக

எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் பீரங்கித் தாக்குதலிலும் பொதுமக்கள் மற்றும் இந்திய வீரர்கள் கொல்லப்பட்டமைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. நேற்று (சனிக்கிழமை) டெல்லியில் பாகிஸ்தான் தூதரக அதிகாரியை வரவழைத்து இந்தியா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், பாகிஸ்தான் இராணுவத்தால் அப்பாவி மக்கள் திட்டமிட்டு தாக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எல்லையில் அமைதியைக் குலைக்கவும் ஜம்மு காஷ்மீரில் வன்முறையைத் தூண்டவும் பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டு செயற்படுவதாகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவில் கொரோனாவிலிருந்து மீண்டவர்கள் 82 லட்சம் கடந்தது!

இந்தியாவில் கொரோனாவிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 82 லட்சத்தை கடந்துள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது -

இந்தியாவில் மேலும் 41 ஆயிரத்து 100 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 88 லட்சத்து 14 ஆயிரத்து 579 ஆக அதிகரித்துள்ளது. 4 லட்சத்து 79 ஆயிரத்து 216 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

நேற்று 447 பேர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து, இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 635 ஆக அதிகரித்துள்ளது. நேற்று மட்டும் 42 ஆயிரத்து 156 பேர் வீடு திரும்பினர்.

இதனால் கொரோனாவில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 82 லட் சத்து 5 ஆயிரத்து 728 ஆக அதிகரித்துள்ளது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# குஜராத் அருகே திடீரென தீ விபத்து பிளாஸ்டிக் தயாரிக்கும் ஆலையில்

குஜராத்தின் வல்சாடில் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கும் ஆலையில் தீப்பிடித்ததில் அது முற்றிலும் எரிந்துபோனது.

வல்சாடில் உள்ள தொழிற்பேட்டையில் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கும் ஆலையில் திடீரெனத் தீப்பிடித்துக் கரும் புகை மூட்டம் எழுந்தது.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இருப்பினும் அந்தக் கட்டடம் முழுவதும் எரிந்துபோனது. விடுமுறை நாளில் அங்குத் தொழிலாளர்கள் எவரும் இருக்கவில்லை.



கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1984.12.11
மதம் – இந்து கு. ஆட்கள்
நட்சத்திரம் – புனர்பூசம் 3
பாவம் – 42
செவ் – 12 இல்
கல்வி – AL (வெளிவாரி பட்டதாரி)
தொழில்–கிராமசேவையாளர்
எதிர்பார்ப்பு – உத்தியோக மணமகள் தேவை.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1982.09.11
மதம் – இந்து கு.ஆட்கள்
நட்சத்திரம் – மிருகசீரிடம் 1
பாவம் – 32 1/2
செவ் – 1இல்
கல்வி – Bsc
தொழில் – விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச தொழில்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி.
இமையாணன் மேற்கு.
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் சுவாச கோளாறால் வைத்தியசாலையில்!




ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் சுவாச கோளாறு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இமாச்சலப்பிரதேசத்திற்கு வந்த அவருக்கு திடீரென சுவாசக் கோளாறு ஏற்பட்டதால் உடனடியாக அருகில் இருந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சில மணி நேர சிகிச்சைக்குப் பிறகு அவர் ஹரியானா புறப்பட்டார். இதற்கிடையில் அவருக்கு கொரோனா தொடர்புடைய எந்த பாதிப்பும் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# சமையலின்போது சிலிண்டர் வெடித்து ஒரு குழந்தை உட்பட 3 பேர் பலி!

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் வீட்டில் சமையலின்போது எரிவாயு சிலிண்டர் தீப்பற்றி வெடித்ததில் தீக்காயம் அடைந்தும், இடிபாடுகளில் சிக்கியும் மூவர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 4 பேருக்கு வைத்தியசாவையில் தீவிரச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆரணி புதுக்காமூர் தெருவில் உள்ள சந்திரா என்பவர் வீட்டில் சமையலின்போது எரிவாயு சிலிண்டர் தீப்பற்றி வெடித்தது.

இதனால் சந்திரா வீடும், அருகில் உள்ள முத்தாபாய் வீடும் இடிந்து விழுந்தன. தகவல் அறிந்ததும் தீயணைப்புத் துறையினரும், காவல் துறையினரும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளில் சிக்கிய சந்திரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த காமாட்சியும் ஒரு குழந்தையும் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

முத்தாபாய், மீனா, ஜானகிராமன் உட்பட 4 பேருக்கு வைத்தியசாலையில் தீவிரச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. எரிவாயு சிலிண்டர் தீப்பற்றிய விபத்தில் மூவர் உயிரிழந்தமை அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இராணுவ ஹெலி விழுந்து விபத்து எகிப்தில் 7 வீரர்கள் பலியாகினர்!



எகிப்தில் இராணுவ ஹெலிக்கொப்டர் விழுந்து ஏற்பட்ட விபத்தில் 5 அமெரிக்க வீரர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல், எகிப்து அமைதி உடன்படிக்கையை செயற்படுத்துவதற்காக எகிப்தில் சர்வதேச அமைதிப்படையினர் முகாமிட்டுள்ளனர்.

அமெரிக்கா, செக் குடியரசு மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் ஏ.எச். பிளாக்ஹொக் ஹெலிக்கொப்டரில் ரோந்து சென்ற போது கடந்த வியாழன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஹெலிக்கொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்த 5 அமெரிக்க வீரர்கள் பலியாகி இருக்கின்றமையும், ஒருவர் படுகாயமடைந்து இருந்தமையும் தெரியவந்துள்ளது.

# தமது வீட்டையே தீயிட்டு எரித்த ஆர்மீனியர்கள்!



நகோர்னா – காரபாக் பிரதேசத்தின் சில பகுதிகள் அஸர்பைஜான் வசம் செல்ல உள்ள நிலையில், அங்கிருந்து வெளியேறும் ஆர்மீனியர்கள் தங்கள் வீடுகளைத் தீ வைத்து எரித்து வருகின்றனர்.

ரஷ்யா மத்தியஸ்தம் செய்ததை அடுத்து, நாகோர்னா – காரபாக் எல்லைப் பகுதி தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட போர் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆர்மீனியா வசம் இருந்த கல்பஜர் மாவட்டம் அஸர்பைஜானுக்கு சொந்தமாகியுள்ளது. இதையடுத்து அங்கு வசிக்க விரும்பாத ஆர்மீனிய மக்கள் பல ஆண்டுகளாக தாங்கள் வசித்து வந்த வீடுகளைத் தீயிட்டு எரித்தனர்.

# பராகுவேயுடனான எல்லைப் பாதுகாப்பு கடுமையாக்க ஆர்ஜென்டீனா நடவடிக்கை

பராகுவே நாட்டுடனான தனது எல்லையில் பாதுகாப்பைக் கடுமையாக்க தீர்மானித்துள்ளதாக ஆர்ஜென்டினா அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரித்தானியாவில் உள்ள அதன் தூதரகம் அதிகாரிகளை எச்சரிக்கும் அநாமதேய குறிப்புத் தொடர்பான செய்திகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பராகுவேவிலிருந்து ஆர்ஜென்டினாவுக்கு அமோனியம் நைட்ரேட்டை அனுப்ப முற்படும் ஒரு நபர் வடக்கு எல்லையின் ஊடக நுழையும் சாத்தியம் தொடர்பாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்ட நபரை அடையாளம் காண விசாரணையைத் தொடங்கியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

1990 களில் ஆர்ஜென்டினாவில் நடந்த இரண்டு தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அத்தோடு 1992 இல், புவெனஸ் அயர்ஸில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் கார் குண்டு மூலம் தாக்கப்பட்டு 29 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மிதக்கின்றன வீடுகள் அதன்மேல் அமர்ந்திருக்கும் மக்கள்!

கொலம்பியாவில் வீடுகள் வெள்ளத்தில் மிதக்கின்றமையால் மக்கள் அதன் கூரைகள் மேல் அமர்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்த கனமழையால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. சோக்கோ பகுதியில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வீடுகளின் கூரை வரை வெள்ளம் பாய்ந்தோடுகிறது. மின்சாரம், தொலைத்தொடர்புகள் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள குழந்தைகளுடன் மக்கள் கூரைகளின் மேல் அமர்ந்துள்ளனர்.



# பான்டனால் காடுகளைக் காப்பாற்ற பிரேஸில் அமைப்பு வேண்டுகோள்!



உலகின் மிகப் பெரிய ஈரநிலத்தில் எரிந்து வரும் நெருப்பை உலக நாடுகள் கண்டு கொள்ளவில்லை என பிரேஸில் விண்வெளி ஆராய்ச்சி மையம் கவலை தெரிவித்துள்ளது.

தென் அமெரிக்காவில் உள்ள பான்டனால் ஈரநிலக் காடுகள் பல மாதங்களாக எரிந்து கொண்டிருக்கின்றன எனக் கூறும் அந்த மையம், தற்போது வரை 28 விழுக்காடு காடுகள் எரிந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

பான்டனால் காடுகள் காற்றில் உள்ள கார்பன் டை ஆக்ஸைடை பெருமளவு உறிஞ்சுவதால் கார்பன் சுழற்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. கலிபோர்னியா மற்றும் அமேசான் காடுகளைப் போலவே பான்டனால் காடுகளைப் பாதுகாப்பதுவும் அவசியம் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினர் கூறியுள்ளனர்.

# கொரோனா வைத்தியசாலையில் தீ ருமேனியாவில் 10 பேர் பரிதாப சாவு!




ருமேனியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் பின்னர் அதை ஒட்டிய அறைக்குத் தீ பரவியது என்றும் இதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மருத்துவர் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கிழக்கு ருமேனிய நகரமான ஐயாசியில் உள்ள கொரோனாவிற்கு சிகிச்சை வழங்கும் வைத்தியசாலைக்கு எஞ்சியிருக்கும் ஆறு நோயாளிகள் மாற்றப்படுவார்கள் என்றும் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# மெக்ஸிகோவில் கொரோனா பாதிப்பு 10 லட்சம் கடந்தது!

மெக்ஸிகோவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தைக் கடந்துள்ளது.

நேற்று சனிக்கிழமை நாட்டில் புதிதாக கொரோனா தொற்று உறுதியான 5 ஆயிரத்து 860 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 லட்சத்து 3 ஆயிரத்து 253 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை மேலும் 635 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள நிலையில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 98 ஆயிரத்து 259 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கைகளை விட உண்மையான நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகமாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் முன்பு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈட்டா புயலைத் தொடர்ந்து மற்றுமோர் அதிர்ச்சி தென் அமெரிக்க நாடுகளுக்கு!

ஈட்டா புயலின் பேரழிவில் இருந்து தென் அமெரிக்க நாடான ஹொண்டுரஸ் மற்றும் கௌதமாலா உள்ளிட்ட நாடுகள் மீள முடியாத நிலையில், அங்கு அடுத்தாக புயல் தாக்கும் அபாயம் இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க சூறாவளி மையம் விடுத்துள்ள அறிக்கையில், ஜமைக்காவின் கிங்ஸ்டனில் இருந்து சுமார் 545 கிலோ மீற்றர் தொலைவில் புதிய புயல் மையம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.



அயோடா என்ற பெயரிடப்பட்டுள்ள அந்தப் புயல், மத்திய அமெரிக்காவை நெருங்கும் போது பெரிய சூறாவளியாக வலிமையுடன் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜமைக்கா, கௌதமாலா, ஹொண்டூராஸ் நாட்டு மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு கூறப்பட்டுள்ளது.

# சட்டவிரோத கடற்றொழில் முல்லை மீனவர் பாதிப்பு!

## இந்த தவறான செயற்பாடுகளை அமைச்சர்தான் ஊக்குவிக்கிறாரா?

## சந்தேகம் வெளியிட்டார் ரவிகரன்

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் மற்றும் இந்திய மீனவர்களினாலும் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர் என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே, கடற்றொழில் அமைச்சர் தான் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுளை ஊக்குவிக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது எனவும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், வடமாகாண ரீதியாக நிபந்தனைகளுடன் கூடிய அட்டைத் தொழிலுக்கு அனுமதி வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து, சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளைத் தென்னிலங்கை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றமையாலும், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையாலும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், வெடிவைத்து மீன் பிடித்தல் போன்ற தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், சம்மேளனம் மற்றும் மீனவ மக்கள் அனைவரும்திரண்டுபலபோராட்டங்களைமேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசு கூடிய கவனம் எடுத்திருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்துமாறு மீனவர்கள் அரசிடம் கோரியிருந்த நிலையில், சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்களே தவிர, கடற்றொழில் அமைச்சோ, அல்லது கடற்றொழில் திணைக்களமோ சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

எமது மீனவர்கள் எமது கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது என்றுதான் கேட்கின்றனர்.

தாம் சிறுதொழில்களாக, குறிப்பிட்டளவு தொழில்களை இலங்கை அரசின் கட்டுப்பாடுகளுக்கு அமைய மீன் பிடிச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிலையில், சட்டவிரோதிகளாக தென்னிலங்கை மீனவர்களும், இழுவை மடிகளைப் பயன்படுத்தி இந்திய இழுவைப் படகுகளும் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் தாம் முற்று முழுதாகப் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். தற்போது கார்த்திகை, மார்கழி, தை, மாசி போன்ற மாதங்களில் குறிப்பிட்டளவு நாள்களுக்குள் மாத்திரம் இறால் தொழில் முல்லைத்தீவில் அமோகமாக இடம்பெறும்.

இந்த நிலையில், தற்போது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்களில் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையால் எமது மீனவர்களின் இறால் தொழிலும் கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

எனவே, இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க வேண்டியவர் யார்? இலங்கை அரசின் உரிய திணைக்களங்கள் மற்றும் உரிய அமைச்சும் அதனோடு சேர்ந்து இவர்களுடைய அறிவித்தலுக்கேற்ப கடற்படையினரும் இணைந்துதான் இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளையும் அத்துமீறல்களையும் தடுக்கவேண்டும். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்காமல், அரசு முல்லைத்தீவு மீனவர்களைப் பட்டினிச்சாவினுள் தள்ளப்போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

ஒரு தமிழ் அமைச்சர் கடற்றொழில் அமைச்சராக இருந்துகொண்டு இந்த சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளை அவர் ஊக்குவிக்கின்றாரா என்றுதான் கேள்வி எழுப்பவேண்டியுள்ளது.

ஏனெனில், வடமாகாண ரீதியாக அட்டைத் தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு, நிபந்தனைகளுடன் அட்டைத் தொழில் செய்ய அனுமதிக்கவுள்ளார் எனக் கடற்றொழில் அமைச்சருடைய அறிக்கைகளைப் பார்க்கமுடிகின்றது.

நிபந்தனைகளுடன் அட்டைத் தொழிலுக்கு அனுமதி வழங்கினாலும் பல்வேறு சட்டவிரோத தொழில்கள் கடலில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இவ்வாறான அனுமதிகள் முல்லைத்தீவு மாவட்டததுக்கு வழங்கப்பட்டால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம்மற்றும்சமேளனம்உள்ளடங்கலாகமீனவர்களுடன் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொள்வோம்.

மேலும், உரியவர்கள் இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

## கற்பிட்டி கடலில் கரை ஒதுங்கியது அரிய வகை சுறா!



கற்பிட்டி தழுவ கடற்பகுதியில் அரிய வகை புள்ளி சுறா ஒன்று நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நிலையில், கரையொதுங்கிய புள்ளிச் சுறா சுமார் 2 ஆயிரம் கிலோ எடை கொண்டதாக காணப்படுவதுடன் 15 அடி நீளமுடையதாகக் காணப்படுகின்றதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

## கம்பஹாவில் சில பகுதி விடுவிப்பு!

### இராணுவத் தளபதி



கம்பஹா மாவட்டத்தில் நீர்க்கொழும்பு, ஜா - எல, கடவத்தை, ராகம மற்றும் பேலியகொட பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், களனி பொலிஸ் பிரிவு எதிர்வரும் திங்கட்கிழமை காலை ஐந்து மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏனைய பகுதிகள் நாளை காலை ஐந்து மணி முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து நாளை காலை ஐந்து மணிக்கு விடுவிக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையரை அழைத்துவர ஐந்து விமானங்கள் ஏற்பாடு!

## வெளிவிவகார அமைச்சு

*கொரோனாநோய்த்தொற்றுநிலைமையின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை ஐந்து விமானங்கள் மூலம் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவ கார அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.*

*இதனடிப்படையில் நவம்பர் 18 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 290 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ள மையுடன் நவம்பர் 20 ஆம் திகதி இத்தாலியிலி ருந்து 100 இலங்கையர்கள் திருப்பி அழைத்து வரப்படவுள்ளனர்.*

*அத்துடன், 297 இலங்கையர்கள் நவம்பர் 21 ஆம் திகதி கட்டாரிலிருந்து அழைத்து வரப்படவுள்ளமையுடன் மேலும் 297 இலங்கையர்கள் நவம்பர் 23 ஆம் திகதி குவைத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.*

*நவம்பர் 26 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானில் இருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் வெளிநாட்டு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட அனுமதியின் அடிப்படையில் டுபாயில்சிக்கியுள்ளஇலங்கையர்களைநாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஐந்து விமானங்கள் மூலம் வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை இலங் கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

## கருணா பற்றிய குற்றச்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு வில்லியம் ஆல்ட் மண்டபத்தில் இன்று நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு அமைச்சரொருவர் வேலைவாய்ப்புக்கான விண்ணப்பத்துக்கு 20 ஆயிரம் ரூபா பணத்தை வாங்கிவிட்டு வேலைவாய்ப்புக் கொடுத்துள்ளார் என்று கருணா அம்மானால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது.

அவரின் இந்தக் குற்றச்சாட்டு ஒரு வகையான பொறாமையின் வெளிப்பாடாகும். அவர் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர்களின் பெயரை உச்சரித்து தன்னைப் பிரபல்யமாகிக்கொள்ள வேண்டும் என நினைத்து செயற்படுபவர். இதனால் அவரின் கருத்துக்கள் தொடர்பாக நான் கண்டுகொள்வது இல்லை.

இதேவேளை, கருணா அம்மான் தொடர்பாக கிழக்கு மாவட்ட மக்களிடையே பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இவை தொடர்பாக அரசு விசாரணைகளை நடத்த வேண்டும்.

என் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபித்தால் நான் அரசியலில் இருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கின்றேன். அதேபோன்று அதனை நிரூபிக்க முடியாவிட்டால் கருணா அம்மான் அரசியலில் இருந்து விலக வேண்டும் - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2020 இல் வெளியிடப்பெற்றது.